\\

சுருக்கம்

பணியமைப்பு  தமிழ்நாடு நகராட்சி ஆணையர் பணி - திரு.ஆர்.இராஜேந்திரன், பிரிவு அலுவலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமைச் செயலகம் – பணிமாறுதல் மூலம் தற்காலிக தேர்வுநிலை நகராட்சி ஆணையராக நியமனம் செய்தது – தாய்த் துறைக்கு திரும்ப அழைத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (நப.1) துறை

அரசாணை (பத்தாண்டு) எண்.628 நாள்:31.12.2007.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (பத்தாண்டு) எண்.7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10.1.2005.
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.51105/சி 1/2007, நாள் 5.10.2007.

---

ஆணை:–

தமிழ்நாடு நகராட்சி ஆணையர் பணிக்கான சிறப்பு விதிகளில், 6 (1) எண்ணிட்ட விதியின் கீழ் தலைமைச் செயலக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையைச் சேர்ந்த பிரிவு அலுவலர், திரு.ஆர்.இராஜேந்திரன் அவர்கள் பணிமாறுதல் மூலம் தேர்வுநிலை நகராட்சி ஆணையராக பணியாற்ற பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது. கடலூர் தேர்வுநிலை நகராட்சியில் தேர்வு நிலை நகராட்சி ஆணையராக பணியாற்றி வரும் திரு.ஆர்.இராஜேந்திரன் அவர்களை தேர்வுநிலை நகராட்சி ஆணையர் பதவியிலிருந்து திரும்ப அழைத்து தாய்த்துறையின் தலைமைச் செயலகத் துறையில் பதவி வழங்குமாறு மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. தேர்வுநிலை நகராட்சி ஆணையர் திரு.ஆர்.இராஜேந்திரன் அவர்களை தேர்வுநிலை நகராட்சி ஆணையர் பதவியிலிருந்து திரும்ப அழைத்து தாய்த்துறையான தலைமைச் செயலகத் துறையில் மீண்டும் பிரிவு அலுவலராக பதவி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதால், அவரை உடனடியாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

வழங்கல் துறைக்கு திரும்ப அழைக்கலாம் என முடிவு செய்யப்பட்டு அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. அவரை மேற்படி பணியிலிருந்து உடனடியாக விடுவிக்கும்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 600 005.
திரு.ஆர்.இராஜேந்திரன், தேர்வுநிலை நகராட்சி ஆணையர், கடலூர் நகராட்சி, கடலூர்.
சம்பள கணக்கு அலுவலர்,சென்னை-9.
மாவட்ட ஆட்சியர்,கடலூர் மாவட்டம்,கடலூர்.
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு,காஞ்சிபுரம் மாவட்டம்
மாவட்ட கருவூல அலுவலர்,கடலூர்.
நகல்:-
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்புநிலை நேர்முக உதவியாளர்,சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.1) துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31.1.2007
பிரிவு அலுவலர்